சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 135/2018

பெயர் திரு. ராஜேஷ் நாள். 15.04.2026
த/பெ. வெங்கடேசன்

**பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வெங்கடேசனுக்கு பூர்வீகம் அடையளச்சேரி கிராமம் ஆகும். வெங்கடேசனுக்கு அங்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றால் இல்லை. 1 ம் வாதி பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றால் பூர்வீக சொத்துக்கள் அங்கு இல்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. **வா.த.சா.ஆ.2 மற்றும் 3** ல் குடும்ப முன்னோர் சொத்து என்று குறிப்பிட்டு 1 ம் வாதி கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். வெங்கடேசனின் தகப்பனார் ஸ்ரீராமலுக்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்று சொன்னால் இல்லை. ஸ்ரீராமலு பெயரில் சொத்துக்கள் இருந்தது என்று சொன்னால் இல்லை. 1 ம் வாதி கிரையம் செய்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் தகப்பனார் சொல்லி தெரியும். என் தகப்பனார் 1 ம் வாதி பூர்விக சொத்துக்களை விற்றதாக என்னிடம் கூறினாரா என்றால் சொத்துக்களை விற்றதாகத்தான் என்னிடம் கூறினார். 1ம் வாதி விற்பனை செய்த சொத்துக்கள் அதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. அது பற்றி இன்றைய தேதி வரை நான் தெரிந்து கொள்ளவில்லை. வழக்கு சொத்துக்கள் வாதிகளின் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் கூவத்தூர் சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் ஆகும். எதன் பெயரில் கூவத்தூர் சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் இல்லை என்று கூறுகிறேன் என்றால் என் தகப்பனார் தன் சொந்த உழைப்பில் அதனை எனக்காக கிரையம் பெற்றதால் அவ்வாறு கூறுகிறேன். வெங்கடேசன் உடன் பிறந்தவர்கள் ஆதிகேசவன், கணேசன் மற்றும் நாராயணன். அடையளச்சேரி சொத்துக்கள் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த பட்டாவை நான் பார்த்தது இல்லை. அடையளச்சேரி சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். அடையளச்சேரி சொத்துக்கள் என் தகப்பனார் அவருடைய சகோதரருக்கிடையே வாய்மொழி பாகத்தில் பிரிக்கப்பட்ட சொத்து என்று சொன்னால், அது என் தகப்பனாரால் கிரையம் வாங்கப்பட்டது ஆகும்.

3. அதன் விபரம் என் தகப்பனார் சொல்லிதான் தெரியும். வழக்கு முதல் இன சொத்தின் மொத்த விஸ்தீரணம் 27 சென்ட் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த சொத்து வெங்கடேசன் மற்றும் அவரின் சகோதரர்களின் பெயரில் கூட்டு பட்டா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் அடையளச்சேரி கிராமத்தில் பூர்வீக சொத்தை பயிர் செய்து வருகிறார்கள் என்றால் அங்கு பூர்வீக சொத்தே கிடையாது. அவர்கள் யாரிடம் இருந்து கிரையம் பெற்றார்கள் என்ற விபரம் தெரியாது.

மேற்கண்ட விபரம் என் தகப்பனார் சொல்லி தெரியும். வழக்கு 1 ம் எண் சொத்து என் தகப்பனாருக்கு வாய்மொழி பாகத்தில் கிடைத்தது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு 1ம் எண் சொத்தில் 1, 2 வாதிகள் மெத்தை வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். நான் வழக்கு 1 ம் எண் சொத்தில் குடியிருந்தது கிடையாது என்றால் சிறுவயதில் குடியிருந்து வந்தேன். அப்பொழுது கல்வீடு தான் இருந்தது. நான் எக்காலத்திலும் 1 ம் எண் சொத்தில் குடியிருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

4. நான் அங்கு குடியிருந்து வந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அடையளச்சேரி கிராமத்தில் விவசாய நிலங்கள் இல்லை. 2000 ம் வருடம் வெங்கடேசன் எந்த சொத்தை யாரிடம் இருந்து, எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கினார் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. அந்த கிரய தொகை எவ்வாறு வெங்கடேசனுக்கு கிடைத்தது என்று எனக்கு தெரியாது. வெங்கடேசன் கிரயம் வாங்கின சொத்தில் வாதிகளுக்கு பங்கு உண்டு என்று சொன்னால் கூவத்தூர் சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களுக்கு பங்கு உண்டு. கூவத்தூர் சொத்தில் தற்பொழுது வீடு மற்றும் கடை உள்ளது. அது எப்பொழுது கட்டப்பட்டது என்றால் 2010 ல் கட்டப்பட்டது.

5. அந்த வீடு எந்த தொகை கொண்டு கட்டப்பட்டது என்றால் என் தகப்பனாரின் சுய வருமானம் மற்றும் என் தாயாரின் நகைகளை விற்றும் கட்டப்பட்டது. நரசிம்மன் கூவத்தூரில் உள்ள கடையில் எலக்ட்ரிக்கல் கடை நடத்தி

வந்தார் என்றால் இல்லை. 2007 ல் பூர்வீக சொத்துக்களை விற்ற பணத்தை கொண்டுதான் அந்த வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் என் பெயரில் எழுதப்பட்ட ஆவணமும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

6. வெங்கடேசன் என் தாயாரை எப்பொழுது திருமணம் செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் முதல் மனைவி இறந்த பிறகு திருமணம் செய்தார். அந்த திருமணத்தை பதிவு செய்யவில்லை. வழக்கின் சொத்துக்களில் வாதிகளுக்கு சமபங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. **பி.த.சா.ஆ.1 முதல் 3** ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் சொத்தை அபகரிக்க பொய் கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.